**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண். 190/2015**
**நாள்: 11/03/2021, வியாழக்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பின் 1-வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் - வள்ளுவன் | த/பெயர் - நடராஜன் |
| வயது - 59 | தொழில் - தனியார் நிறுவன மேலாளர் |
| சாதி - | மதம் - |
| விலாசம் - போரூர், சென்னை | |

**குறுக்கு விசாரணை (PW1)**

நான் எம்.ஏ.பப்ளிக் அட்மினிஷ்ட்ரேஷன் படிப்பு முடித்துள்ளேன். என்னுடைய பூர்வீகம் பொன்னேரி தாலுக்காவிலுள்ள மெதூர் கிராமம் ஆகும். நான் மெதூர் கிராமத்தில்தான் பிறந்தேன். அதன்பிறகு படிப்பிற்காக நாங்கள் சென்னை சென்றோம். வளர்ந்தது சென்னையில்தான். தற்போதுவரை சென்னையில்தான் வசித்து வருகிறேன். வழக்கு சொத்து என்னுடைய பெயரியப்பா ரங்கநாத முதலியார் கிரையம் பெற்ற சொத்தாகும். அவருடைய மனைவி குப்பம்மாள் குழந்தை இல்லாததால் எனக்கு கிரையம் எழுதிக்கொடுத்தார். ரங்கநாத முதலியார் வழக்கு சொத்தை தியாகராஜ செட்டியாரிடமிருந்து 1974ல் கிரையம் பெற்றார். ரங்கநாத முதலியார் 1988ல் காலமானார். அன்னாரின் இறப்புச்சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய வழக்குரையில் ரங்கநாத முதலியார் எப்பொழுது இறந்தார் என்பதையும், அவருடைய இறப்புச்சான்றிதழையும் வழக்கில் சொல்லவும் இல்லை, தாக்கல் செய்யவும் இல்லை என்றால் தெரியவில்லை. ரங்கநாத முதலியாருக்கும், குப்பம்மாளுக்கும் வாரிசு இல்லை என்பதை நிரூபிக்க அவர்களின் வாரிசுதாரர் சான்றிதழை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. குப்பம்மாள் டிசம்பர் 1994ல் காலமானார். குப்பம்மாளின் இறப்புச் சான்றிதழ் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தெரியவில்லை. குப்பம்மாளின் வாரிசுதாரர் சான்றிதழ் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா

என்றால் வழக்கறிஞரிடம்தான் கேட்கவேண்டும். நியாபகம் இல்லை. குப்பம்மாளை ரங்கநாத முதலியார் இறப்பிற்குபின் அவரது தம்பி நடராஜன் என்பவர் கவனித்து வந்தார் என்றால் சரியல்ல. அசல் உயில் பொன்னேரி சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கில் தாக்கல் செய்திருக்கிறேன். மேற்படி மேல்முறையீட்டு வழக்கு எண்.28/2014ல் இவ்வழக்கின் பிரதிவாதிகள் தரப்பினரா என்றால் இல்லை. ஆகவே மேற்படி வழக்கானது இவ்வழக்கின் பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வழக்குச்சொத்து குப்பாமாளுக்கே பாத்தியப்படாத சொத்து என்பதால் அவருக்கு உயில் எழுத உரிமை இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் வழக்குச்சொத்தை பிரதிவாதிகள் விற்பனை செய்ய முற்படுவதாக குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி விவரத்தை நிரூபிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. ஆனால் பதிவு அலுவலகத்திற்கு சொத்தை விற்பனை செய்யக்கூடாது என்று ஆட்சேபணை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. 07/08/2015 அன்று சட்டத்திற்கு புறம்பாக பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் செயல்படுவதற்கு காவல்துறை ஆவணமோ, வருவாய்த்துறை ஆவணமோ தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அவ்வாறு உண்மையில் பிரதிவாதிகள் வழக்குசொத்தை விற்பனை செய்ய முற்பட்டாலோ அல்லது சட்டத்திற்கு புறம்பான வழியில் செயல்பட்டாலோ காவல்துறையில் முறையிட்டிருப்பேன் என்றும் அதுபொய் என்பதால்தான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 07/08/2015 அன்று பிரதிவாதிகள் வழக்குச்சொத்தில் சட்டத்திற்கு புறம்பாக செயல்படுவதாக கூறியுள்ளது தவறு என்றால் சரியல்ல. வழக்குச்சொத்தில் நான் அனுபவித்து வருகிறேன் என்பதற்கு உயிலை தவிர வேறுஎன்ன ஆதாரம் இருக்கிறது என்றால் வீட்டில் வருவாய்த்துறை ஆவணங்களை வைத்துள்ளேன். 1998லிருந்து வழக்கு இருப்பதால் வருவாய்த்துறையில் ஆவணங்கள் எதுவும் வழங்கவில்லை. வழக்குசொத்திற்கான பட்டா என்மீது மாற்றவில்லை என்பதால் என் பெயரில் கிஸ்து ரசீது எதுவும் இல்லை. வழக்கு சொத்தில் அனுபவத்தில் நான் இல்லை என்றும், ஆகவே நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் பெயரிலுள்ள பட்டா போலியானது என்று தெரிந்தவுடன் நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் இல்லை, நீதிமன்றத்திற்கு வந்துவிட்டேன். பிரதிவாதிகள்

பெயரில் போலியாக பட்டா வாங்கப்பட்டிருப்பின் அதை ரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றும் அது பொய் என்பதால் தான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. ரங்கநாத முதலியாரின் தந்தை பெயர் தெரியாது நான் அவரை பார்த்தது இல்லை. ரங்கநாத முதலியாரின் தந்தை பெயர் ராக்கியப்ப முதலியார் என்றால் ஆம். ரங்கநாத முதலியாருக்கு 2 சகோதரர்கள். அவர்கள் பெயர் நடராஜ் மற்றொருவர் பெயர் தெரியவில்லை. ராக்கியப்ப முதலியாருக்கு 2 தாரம். ரங்கநாத முதலியார் ராக்கியப்ப முதலியாரின் 2ம் தாரத்தின் மகன் ஆவார். ரங்கநாத முதலியாரின் குடும்ப பாகப்பிரிவினை எப்பொழுது நடந்தது என்று எனக்கு தெரியாது. ரங்கநாத முதலியார் மனைவி குப்பம்மாளின் தாயார் பெயர் அகிலாண்டம்மாள். வழக்கு சொத்தை 05/08/1978ல் உயில் வாயிலாக ரங்கநாத முதலியார் அவரது உடன் பிறந்த சகோதரர் 2ம் பிரதிவாதியின் தந்தை உயில் மூலம் கொடுத்துவிட்டார் என்றால் அது தவறான ஆவணம். ரங்கநாத முதலியாரின் மறைவிற்கு பிறகு குப்பம்மாள் அவரது சிலசொத்துக்களை விற்பனை செய்துள்ளாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ரங்கநாத முதலியாரின் இறப்பிற்கு பிறகு அவரது மனைவி குப்பம்மாள் யாருடைய பாதுகாப்பில் வளர்ந்து வந்தார்கள் என்றால் என் அம்மா சிவபூஷணம் அம்மாளுடன் வசித்து வந்தார். சிவபூஷணம் அம்மாள் சென்னையில் தக்கர் தெரு, புரசைவாக்கத்தில் வசித்து வந்தார். குப்பம்மாள் ரங்கநாத முதலியார் இறப்பிற்குபின் அவரது சகோதரர் நடராஜ முதலியார் வீட்டில் வசித்து வந்தார் என்றால் சரியல்ல. குப்பம்மாள் டிசம்பர் 29, 1994ல் காலமானார். வழக்கு சொத்து 05/08/1978 தேதியிட்ட உயில் வாயிலாக 2ம் பிரதிவாதியின் தந்தை நடராஜ முதலியார் பெயரில் ரங்கநாத முதலியார் உயில் எழுதிவைத்துவிட்டதால் அதில் நான் உரிமை கோர இயலாது என்றால் சரியல்ல. உயில் எழுதப்பட்ட சொத்தின்மீது குப்பம்மாளுக்கு வழக்கு சொத்தின்மீது எந்த உரிமையும் கிடையாது என்றால் அது தவறான உயிலாகும். குப்பமாள் இறப்பிற்கு 1 மாதத்திற்கு முன்பு ஏற்படுத்தப்பட்ட வா.த.சா.ஆ.2 உயிலானது போலியானது என்றால் சரியல்ல. மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் பொன்னேரியில் தாக்கல் செய்து அசல் வழக்கு எண்.103/1998 வழக்கில் இந்த வழக்கின் பிரதிவாதிகள் தரப்பினர் அல்ல. மேற்படி வழக்கில் நானும் என் தயாரும் பிரதிவாதிகளாவோம் மேற்படி வழக்கை ராஜாமணி மற்றும் அவரது சகோதர சகோதரிகள் தாக்கல் செய்தார்கள். அது ஒருதலைப்பட்சமாக தீர்ப்பாகிவிட்டது.

பொன்னேரி சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.81/2005 வழக்கை ராஜாமணி மற்றும் அவரது சகோதர சகோதரிகள் தாக்கல் செய்தார்கள். இந்த வழக்கு சொத்தும் அதில் காட்டப்பட்டுள்ளது. மேற்படி 81/20005 வழக்கில் நானும் என் தயாரும் பிரதிவாதிகள் ஆவோம். மேற்படி வழக்கில் பிரதிவாதிகள் தரப்பினர் அல்ல. ஆனால் 2ம் பிரதிவாதியின் அண்ணன் மனைவி வாதி ஆவார். அண்ணன் மனைவி ராஜாமணி தரப்பினர் ஆவார். வழக்குசொத்து தொடர்பாக கடந்த 26/11/2009 அன்று 2ம் பிரதிவாதியின் தந்தை நடராஜ முதலியார் 1ம் பிரதிவாதிக்கு உயில் எழுதிவைத்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது அது போலியானதாகும். நடராஜ முதலியார் காலமான தேதி தெரியாது. அவர் காலமான பிறகுதான் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு தானசெட்டில்மென்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் தவறாகும். வழக்கு சொத்திற்கான அனைத்து வருவாய் ஆவணங்களும் 2ம் பிரதிவாதி பெயரில் இருக்கிறது என்றால் எந்த வருடத்திலிருந்து இருக்கிறது என்று சாட்சி கேள்வி எழுப்புகிறார். 2005 முதல் தற்போது வரை வழக்கு சொத்திற்கான அனைத்து வருவாய்த்துறை ஆவணங்களும் 2ம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் வழக்கு நிலுவையில் உள்ளதால் கொடுக்க முடியாது அவ்வாறு கொடுத்திருந்தால் அது சரியானதல்ல. 05/08/1978 தேதியிட்ட ரங்கநாத முதலியார் எழுதிய உயில் பற்றி அதை ரத்து செய்வதற்கு இந்த வழக்கில் பரிகாரம் எதுவும் கோரவில்லை என்றால் சரிதான். அதற்கு பதிலாகதான் இந்த வழக்கை சொத்து பாத்தியத்திற்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தில் தற்போது வரை பிரதிவாதிகள் அனுபவத்தில் இருக்கிறார்கள் என்றும், நான் வழக்கு சொத்து அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதால் ஆவணங்களை வருவாயத்துறையினர் கொடுப்பதில்லை. குப்பம்மாள் எழுதிய உயிலில் வா.த.சா.ஆ.2 உயிலில் உள்ள சர்வே எண்.203ல் உள்ள கிணறு மின்இணைப்பு எண்.26/96/37ல் உள்ள மின்சார இணைப்பிற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் முன்பு இருந்தது தற்போது இல்லை. மின் இணைப்பிற்கு எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை. சர்வே எண்.1032/2 26 சென்ட் குப்பமாளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதால்தான் அவர் உயில் எழுதிவைத்துள்ளார். சர்வே எண்.203 சொத்தானது குப்பமாளின் தங்கையின் பேத்தியான தரணிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. சர்வே எண்.1032/2 மற்றும் சர்வே எண்.203 ஆகிய சொத்துக்கள் குப்பமாளுக்கு

பாத்தியப்படாத சொத்து என்றும் அதனால் அவர் எழுதி வைத்துள்ள உயில் செல்லாது என்றால் சரியல்ல. ஆகவே, உயிலின் அடிப்படையில் நாங்கள் உரிமை கோருவதால் எங்கள் வழக்கு நிலைக்கத்தக்கது என்றால் சரியல்ல. அது உண்மையான உயில் என்பதால்தான் அசல் ஆவணங்கள் எங்களிடம் உள்ளது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப் பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பொன்னேரி.**